Sl. No. : **50000949** **JSOGS16**

பதிவு எண் | | | | | | | | | |

# 2016

# Paper II

## பொது அறிவு

## (Degree Standard)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 2 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 200

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு **100** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். ஏதேனும் குறைபாடு இருப்பின் அதனை பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்கவும்.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. <u>தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.</u>
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
13. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

SEE BACKSIDE OF THIS BOOKLET FOR ENGLISH VERSION OF INSTRUCTIONS

SEAL

1. Compare Vitamin List I with its List II deficiency diseases

| | List I | | List II |
|---|---|---|---|
| (a) | Vitamin – B12 | 1. | Sterility |
| (b) | Vitamin – B6 | 2. | Haemorrhagic condition |
| (c) | Vitamin – E | 3. | Pernicious anaemia |
| (d) | Vitamin – K | 4. | Skin disease |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

பட்டியல் I லுள்ள வைட்டமின்களை பட்டியல் II அவை குறைவினால் ஏற்படும் வியாதிகளோடு ஒப்பிடு

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | வைட்டமின் – B12 | 1. | மலட்டுத்தன்மை |
| (b) | வைட்டமின் – B6 | 2. | இரத்தப்போக்கு நிலைமை |
| (c) | வைட்டமின் – E | 3. | தீவிர இரத்த சோகை |
| (d) | வைட்டமின் – K | 4. | தோல் வியாதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

2. The acid with the formula, $H_2N_2O_2$ is known as

(A) hydronitrous acid

(B) hyponitrous acid

(C) hypernitrous acid

(D) nitroxylic acid

$H_2N_2O_2$ என்ற வாய்பாட்டை உடைய அமிலம் அழைக்கப்படும் பெயர்

(A) ஹைட்ரோநைட்ரஸ் அமிலம்

(B) ஹைப்போநைட்ரஸ் அமிலம்

(C) ஹைப்பர் நைட்ரஸ் அமிலம்

(D) நைட்ராக்ஸிலிக் அமிலம்

3. The energy released by the complete oxidation of one molecule of glucose in plants is

(A) 1600 KJ (B) 2300 KJ

(C) 2500 KJ (D) 2900 KJ

தாவரங்களில் ஒரு மூலக்கூறு சர்க்கரை முழுமையாக ஆக்ஸிஜனேற்றம் செய்யப்பட்டால் வெளியாகும் ஆற்றலானது

(A) 1600 KJ (B) 2300 KJ

(C) 2500 KJ (D) 2900 KJ

4. Match the List I and List II and choose the correct answer

| | List I | | List II |
|---|---|---|---|
| (a) | Telophase | 1. | Chromatids separate and move towards poles |
| (b) | Metaphase | 2. | Spindle fibres disappears |
| (c) | Anaphase | 3. | Nuclear membrane disappears |
| (d) | Prophase | 4. | Chromosomes at the equatorial plane |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

பட்டியல் I உடன் II ஐப் பொருத்தி, சரியான விடையை தேர்ந்தெடுக்க

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | டீலோ நிலை | 1. | குரோமேட்டிட்கள் பிரிந்து துருவத்தை நோக்கி நகர்கின்றன |
| (b) | மெட்டா நிலை | 2. | ஸ்பின்டில் இழைகள் மறைந்து விடுகிறது |
| (c) | அனா நிலை | 3. | நியூக்ளியஸ் உறை மறைய ஆரம்பிக்கிறது |
| (d) | புரோ நிலை | 4. | குரோமோசோம்கள் மையப்பகுதியில் காணப்படுகிறது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

5. Choose a correct pair of the followings

(A) Gonorrhoea – Wuchereria
(B) Neisseria – Ringworm
(C) Treponema – Syphilis
(D) Microsporum – Filariasis

சரியான இணையை தேர்ந்து எடுக்கவும்

(A) கோனொரியா – உச்சரேரியா
(B) நெய்ஸிரியா – படர்தாமரை
(C) டிப்போனிமா – சைஃபிலிஸ்
(D) மைக்ரோஸ்போரம் – யானை கால்நோய்

6. Which country is not the member of SAARC?

(A) Afghanistan
(B) Myanmar
(C) Pakistan
(D) Bhutan

சார்க் அமைப்பில் இடம் பெறாத நாடு எது?

(A) ஆப்கானிஸ்தான்
(B) மியான்மர்
(C) பாகிஸ்தான்
(D) பூட்டான்

7. The Nelson Mandela Award 2016 is awarded to

(A) Ms. Tabassum Adnan
(B) Mother Teresa
(C) Ms.Padma Sachdev
(D) Mr. Narendra modi

2016 ம் ஆண்டிற்கான நெல்சன் மண்டேலா விருதினை பெற்றவர்

(A) Ms. தபசம் ஆட்நன்
(B) அன்னை தெரேசா
(C) Ms. பத்மா சச்தேவ்
(D) திரு. நரேந்திரமோடி

8. Which country is going to host the 2016 twenty 20 World Cup?

(A) Australia
(B) Pakistan
(C) India
(D) South Africa

2016 ல் நடைபெறவுள்ள 20 ஓவர் உலகப் கோப்பை போட்டியை எந்த நாடு நடத்த உள்ளது?

(A) ஆஸ்திரேலியா
(B) பாகிஸ்தான்
(C) இந்தியா
(D) தென்னாப்பிரிக்கா

9. Which of the following is correct as per the population census of 2011?

(A) 940 females for 1000 of males

(B) 933 females for 1000 of males

(C) 950 females for 1000 of males

(D) 953 females for 1000 of males

2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி பின்வருவனவற்றுள் எது சரியானது?

(A) 1000 ஆண்களுக்கு 940 பெண்கள்

(B) 1000 ஆண்களுக்கு 933 பெண்கள்

(C) 1000 ஆண்களுக்கு 950 பெண்கள்

(D) 1000 ஆண்களுக்கு 953 பெண்கள்

10. Match the Indian medalist of 2016 Rio Paralympics with their sport :

| | | | |
|---|---|---|---|
| (a) | Devandra Jhajharia | 1. | Shooting |
| (b) | Deepa Malik | 2. | High Jump |
| (c) | Mariyappan Thangavelu | 3. | Javelin Throw |
| (d) | Priyesha Deshmukh | 4. | Shotput |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

2016 ரியோ பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்திய வீரர்களை அவரது விளையாட்டோடு பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தேவந்திர ஜஜ்ஜாரியா | 1. | சுடுதல் |
| (b) | தீபா மாலிக் | 2. | உயரம் தாண்டுதல் |
| (c) | மாரியப்பன் தங்கவேலு | 3. | ஈட்டி எறிதல் |
| (d) | ப்ரியேஷா தேஷ்முக் | 4. | குண்டு எறிதல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

11. Temperature decreases with increasing height at the rate of

(A) 5.5°C/1000 m

(B) 6.5°C/1000 m

(C) 5.5°C/100 m

(D) 5.5°C/10000 m

உயரம் அதிகரிக்கும் போது குறையும் வெப்பத்தின் விகித அளவு

(A) 5.5°C ஒவ்வொரு 1000 மீட்டர்

(B) 6.5°C ஒவ்வொரு 1000 மீட்டர்

(C) 5.5°C ஒவ்வொரு 100 மீட்டர்

(D) 5.5°C ஒவ்வொரு 10,000 மீட்டர்

12. The distance between Earth and the Sun is about

(A) $1,496 \times 10^8$ kms (B) $1,498 \times 10^8$ kms

(C) $1,497 \times 10^8$ kms (D) $1,499 \times 10^8$ kms

பூமி மற்றும் சூரியனுக்கு இடையே உள்ள தூரம் எவ்வளவு

(A) $1,496 \times 10^8$ கிலோ மீட்டர்கள் (B) $1,498 \times 10^8$ கிலோ மீட்டர்கள்

(C) $1,497 \times 10^8$ கிலோ மீட்டர்கள் (D) $1,499 \times 10^8$ கிலோ மீட்டர்கள்

13. Of the total Earth surface ocean covers about?

(A) 68 % (B) 71 %

(C) 63 % (D) 52 %

பூமியின் மொத்த பரப்பில் கடலின் பரவல் —————— சதவீதம் ஆகும்.

(A) 68 % (B) 71 %

(C) 63 % (D) 52 %

14. The First people to set new port towns in India

(A) British (B) Dutch

(C) Portuguese (D) French

இந்தியாவில் புது துறைமுகங்களை உருவாக்கிய முதல் மக்கள்

(A) ஆங்கிலேயர்கள் (B) டச்சுக்காரர்கள்

(C) போர்ச்சுகீசியர்கள் (D) பிரெஞ்சுக்காரர்கள்

15. Who was the twenty-second Tirthankara?

(A) Parsva
(B) Rishabha
(C) Neminatha
(D) Mahavira

இருபத்தி இரண்டாவது தீர்த்தங்கரர் யார்?

(A) பார்சவர்
(B) ரிசபர்
(C) நேமிநாதர்
(D) மகாவீரர்

16. The Chola capital Uraiyur during the Sangam Age was famous for

(A) Snake skins
(B) Leather goods
(C) Wood and ivory works
(D) Pearls and fine Muslin

சங்க கால சோழர்களின் தலைநகர் உறையூர் எதற்கு பெயர் பெற்றது?

(A) பாம்பு தோல்
(B) தோல் பொருட்கள்
(C) மரம் மற்றும் கைவினைப் பொருட்கள்
(D) முத்து மற்றும் மஸ்லின்

17. In which country the International Hindi conference was conducted in 2015?

(A) India
(B) New Jersey
(C) Singapore
(D) Malaysia

2015ல் சர்வதேச இந்தி மாநாடு எங்கு நடத்தப்பட்டது?

(A) இந்தியா
(B) நியூ ஜெர்சி
(C) சிங்கப்பூர்
(D) மலேசியா

18. Fa-Hien, the foreign visitor came to India during the times of

(A) Sri Gupta
(B) Chandra Gupta I
(C) Samudra Gupta
(D) Chandra Gupta II

பாகியான் என்ற வெளிநாட்டுப்பயணி இவருடைய காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்

(A) ஸ்ரீ குப்தர்
(B) முதலாம் சந்திர குப்தர்
(C) சமுத்திர குப்தர்
(D) இரண்டாம் சந்திர குப்தர்

19. Whose idea of India provided inspiration for Milton's picture of satan sitting exalted in his book 'Paradise Lost'?

(A) Nicolas Conti
(B) Sir Thomas Roe
(C) Bernier
(D) Hawkins

யாருடைய சிந்தனை மில்டனின் 'Paradise Lost' என்ற படைப்பில் சாத்தான் என்ற கதாப்பாத்திரம் மமதையோடு உருவாக தூண்டுதலாக இருந்தது?

(A) நிக்கோலா காண்டி
(B) சர் தாமஸ் ரோ
(C) பெர்னியர்
(D) ஹாக்கின்ஸ்

20. Which one of the following institute 'curve' groups?

(A) Political parties
(B) AITUC
(C) Students Association
(D) Protection of Human Rights Association

கீழ்வருபவைகளில் எது 'வளைவு' கூட்டம் எனப்படுகிறது?

(A) அரசியல் கட்சிகள்
(B) எஐடியுசி
(C) மாணவர்கள் சங்கம்
(D) மனித உரிமைகள் பாதுகாப்பு சங்கம்

21. Which one of the following amendments provides for 29% of the total proceeds of the union to the states?

(A) 80th
(B) 81st
(C) 82nd
(D) 83rd

கீழ்வருபவனவற்றில் எந்த சட்ட திருத்தத்தில், மத்திய மொத்த தொகுப்பிலிருந்து 29% மிகையாமல் மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது?

(A) 80 வது சட்டத்திருத்தம்
(B) 81 வது சட்டத்திருத்தம்
(C) 82 வது சட்டத்திருத்தம்
(D) 83 வது சட்டத்திருத்தம்

22. The Inter-state council was set up in the year 1990 through

(A) Constitutional Amendment

(B) Presidential order

(C) Law enacted by the parliament

(D) Supreme court order

1990–ம் ஆண்டு மாநிலங்களிடை மன்றம் ஏற்படுத்தப்பட்டது

(A) அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம்

(B) குடியரசு தலைவரின் உத்தரவு மூலம்

(C) பாரளுமன்ற சட்டத்தின் மூலம்

(D) உச்ச நீதிமன்ற உத்தரவின் மூலம்

23. The Fortaleza declaration and Action Plan '2014' is the outcome of

(A) BRICS summit | (B) SAARC summit

(C) ASEAN summit | (D) NAM summit

'ஃபோர்டலெசா பிரகடனம் மற்றும் செயல்திட்டம் 2014' வெளியிடப்பட்டது

(A) பிரிக்ஸ் உச்சிமாநாடு | (B) சார்க் உச்சிமாநாடு

(C) ஆசியான் உச்சிமாநாடு | (D) நாம் உச்சிமாநாடு

24. Which among the following is considered as a primary nutrient for plants?

(A) Calcium

(B) Magnesium

(C) Sulphur

(D) Nitrogen

கீழ் குறிப்பிட்டுள்ள தாது பொருட்களில் எது முதல் நிலை தாது ஊட்ட பொருள் என குறிப்பிடுகிறோம்.

(A) கால்சியம்

(B) மெக்னீஸியம்

(C) கந்தகம்

(D) நைட்ரஜன்

25. Which of the following committee of the Parliament in India is not related to financial matter?

(A) Public Accounts Committee

(B) Committee on Estimates

(C) Committee on Public undertakings

(D) Committee on Government Assurances

பின்வரும் இந்திய பாராளுமன்ற குழுக்களில் எந்த ஒன்று நிதி விவகாரங்களுடன் தொடர்புடையது அன்று?

(A) பொது கணக்கு குழு

(B) மதிப்பீட்டுக் குழு

(C) பொதுத்துறை நிறுவனங்களுக்கான குழு

(D) அரசு உத்தரவாதங்களுக்கான குழு

26. Match the following with suitable option :

| | List I (Language) | | List II (Family) |
|---|---|---|---|
| (a) | Bengali | 1. | Sino - Tibetian |
| (b) | Gondi | 2. | Austric |
| (c) | Kachin | 3. | Indo - European |
| (d) | Korku | 4. | Dravidian |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

சரியான விடையை தேர்ந்தெடுத்து பொருத்துக.

| | பட்டியல் I (மொழி) | | பட்டியல் II (குடும்பம்) |
|---|---|---|---|
| (a) | பெங்காலி | 1. | சீனா-திபெத்தியன் |
| (b) | கோண்டி | 2. | ஆஸ்டிரிக் |
| (c) | கச்சின் | 3. | இந்தோ - ஐரோப்பியன் |
| (d) | கோர்கு | 4. | திராவிடன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

27. Which plan model is a Neo-Gandhian approach to development?

(A) LPG model

(B) Development of heavy industries model

(C) PURA model

(D) Socialistic pattern of society model

இவற்றில் ஒரு திட்ட மாதிரி புதிய காந்திய முன்னேற்ற அணுகுமுறையைக் கொண்டது?

(A) எல்.பி.ஜி மாதிரி

(B) பேரியல் தொழில் அபிவிருத்தி மாதிரி

(C) புரா (PURA) மாதிரி

(D) சமதர்ம சமுதாய முறை மாதிரி

28. Who was the real architect of the second five year plan?

(A) Harrod-Domar

(B) Nehru

(C) Mahalanobis

(D) Indira Gandhi

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை வடிவமைத்தவர் யார்?

(A) ஹாராட்-டோமர்

(B) நேரு

(C) மகலனோபிஷ்

(D) இந்திராகாந்தி

29. The change in rural consumer expenditure on non-food products as compared to the urban consumer in 2013

(A) Increased

(B) Decreased

(C) Remained constant

(D) Showed sharp fluctuations

2013-ல் உணவு பண்டங்கள் நீங்கலானவற்றின் மீதான நுகர்வுச் செலவு நகரங்களை ஒப்பிடும் போது கிராமங்களில்

(A) அதிகரித்துள்ளது

(B) குறைந்துள்ளது

(C) நிலையானதாக உள்ளது

(D) மிகுதியான ஏற்ற இறக்கங்களைக் கொண்டது

30. Arrange the Presidents of Indian National Congress in chronological order.

I. George Yule

II. William Wedderburn

III. Dadabhai Naoroji

IV. Syed Badruddin Tyabji

(A) IV, III, I, II
(B) III, IV, I, II
(C) II, I, III, IV
(D) I, III, II, IV

இந்திய தேசிய காங்கிரசின் தலைவர்களை கால வரிசையில் வரிசைப்படுத்துக

I. ஜார்ஜ் யூலி

II. வில்லியம் வெட்டர்பர்ன்

III. தாதாபாய் நௌரோஜி

IV. சையத் பத்ருதின் தயாப்ஜி

(A) IV, III, I, II
(B) III, IV, I, II
(C) II, I, III, IV
(D) I, III, II, IV

31. The annulment of Partition of Bengal was done by whom?

(A) Lord Chelmsford
(B) Lord Hardinge
(C) Lord Minto
(D) Lord Curzon

வங்கப் பிரிவினையை ரத்து செய்வதவர் யார்?

(A) சேம்ஸ்போர்டு பிரபு
(B) ஹார்டிஞ்ச் பிரபு
(C) மிண்டோ பிரபு
(D) கர்சன் பிரபு

32. If the radius of a circle is doubled, area is multiplied by

(A) 3 (B) 2

(C) 4 (D) 8

ஒரு வட்டத்தின் ஆரம் இருமடங்கானால், அதன் பரப்பளவை ———————— ஆல் பெருக்க வேண்டும்.

(A) 3 (B) 2

(C) 4 (D) 8

33. Three numbers are in the ratio 4 : 5 : 6 and their average is 25. The largest number is

(A) 35 (B) 40

(C) 45 (D) 30

மூன்று எண்களின் விகிதம் 4 : 5 : 6 அதனுடைய சராசரி 25 எனில் மிக பெரிய எண் எது?

(A) 35 (B) 40

(C) 45 (D) 30

34. Find out the wrong number in the given series.

5, 11, 23, 47, 96, 191, 383

(A) 181 (B) 23

(C) 96 (D) 5

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் வரிசையில் எது தவறான எண்?

5, 11, 23, 47, 96, 191, 383

(A) 181 (B) 23

(C) 96 (D) 5

35. $\dfrac{180 \times 15 - 12 \times 20}{140 \times 8 + 2 \times 55} = ?$

(A) $\dfrac{1}{8}$

(B) $\dfrac{4}{9}$

(C) 2

(D) 5

$\dfrac{180 \times 15 - 12 \times 20}{140 \times 8 + 2 \times 55} = ?$

(A) $\dfrac{1}{8}$

(B) $\dfrac{4}{9}$

(C) 2

(D) 5

36. The value of $1+\cfrac{1}{1+\cfrac{1}{1+\cfrac{1}{1+\cfrac{1}{1+{}^{2}\!/_{3}}}}}$

(A) ${}^{21}\!/_{13}$

(B) ${}^{17}\!/_{3}$

(C) ${}^{34}\!/_{21}$

(D) ${}^{8}\!/_{5}$

$1+\cfrac{1}{1+\cfrac{1}{1+\cfrac{1}{1+\cfrac{1}{1+{}^{2}\!/_{3}}}}}$ ன் மதிப்பு

(A) ${}^{21}\!/_{13}$

(B) ${}^{17}\!/_{3}$

(C) ${}^{34}\!/_{21}$

(D) ${}^{8}\!/_{5}$

37. If $A:B=5:7$ and $B:C=6:11$ then $A:B:C$ is

(A) 30 : 42 : 77

(B) 40 : 35 : 27

(C) 20 : 15 : 17

(D) 15 : 20 : 30

$A:B=5:7$ மற்றும் $B:C=6:11$ எனில் $A:B:C$ -ன் மதிப்பு

(A) 30 : 42 : 77

(B) 40 : 35 : 27

(C) 20 : 15 : 17

(D) 15 : 20 : 30

38. Which of the following ratios is greatest?

(A) 7 : 15

(B) 15 : 23

(C) 17 : 25

(D) 21 : 29

பின்வருவனவற்றுள் எந்த விகிதம் பெரியது?

(A) 7 : 15

(B) 15 : 23

(C) 17 : 25

(D) 21 : 29

39. The value of $5005 - 5000 \div 10$ is

(A) 5000

(B) 4965

(C) 4505

(D) 4500

$5005 - 5000 \div 10$ ன் மதிப்பு

(A) 5000

(B) 4965

(C) 4505

(D) 4500

40. The ratio of the radii of two cylinders is 2 : 3 and the ratio of their heights is 5 : 3. The ratio of their volume will be

(A) 4 : 9
(B) 9 : 4
(C) 20 : 27
(D) 27 : 20

இரு உருளையின் ஆரங்களின் விகிதம் 2 : 3 மற்றும் அவற்றின் உயரங்களின் விகிதம் 5 : 3 எனின் அதன் கனஅளவுகளின் விகிதம்

(A) 4 : 9
(B) 9 : 4
(C) 20 : 27
(D) 27 : 20

41. One side of a parallelogram is 18 cm and its distance from the opposite side is 8 cm. The area of the parallelogram is

(A) 160 $cm^2$
(B) 230 $cm^2$
(C) 144 $cm^2$
(D) 140 $cm^2$

ஒரு இணைகரத்தின் ஒரு பக்கம் 18 cm. ஒரு பக்கத்திலிருந்து அடுத்த பக்கத்திற்கு ஆன தொலைவு 8 cm எனில் அவ்விணைகரத்தின் பரப்பு

(A) 160 $cm^2$
(B) 230 $cm^2$
(C) 144 $cm^2$
(D) 140 $cm^2$

42. A square and a rectangle have equal areas. If their perimeters are $P_1$ and $P_2$ respectively then

(A) $P_1 < P_2$
(B) $P_1 = P_2$
(C) $P_1 > P_2$
(D) $P_1 \geq P_2$

ஒரு சதுரம் மற்றும் செவ்வகத்தின் பரப்பளவுகள் சமம். அவற்றின் சுற்றளவுகள் முறையே $P_1$ மற்றும் $P_2$ எனில்

(A) $P_1 < P_2$
(B) $P_1 = P_2$
(C) $P_1 > P_2$
(D) $P_1 \geq P_2$


https://www.freshersnow.com/previous-year-question-papers/

43. Find the LCM of 8, 15, 24 and 72.

(A) 350
(B) 360
(C) 720
(D) 735

மீ.சி.ம காண் : 8, 15, 24 மற்றும் 72

(A) 350
(B) 360
(C) 720
(D) 735

44. The H.C.F. of 3556 and 3444 is

(A) 28
(B) 32
(C) 43
(D) 18

3556 மற்றும் 3444 இவற்றின் மீ.பொ.வ.

(A) 28
(B) 32
(C) 43
(D) 18

45. Which of the following regions in India is a biodiversity hot spot?

(A) Western Himalayas
(B) Eastern Himalayas
(C) Coastal Andhra and Orissa
(D) Jaisalmer-Barmer region

கீழ்க்கண்டவற்றுள் எது இந்தியாவில் உள்ள பல்லுயிரிய ஹாட்ஸ்பாட்

(A) மேற்கு ஹிமாலயா
(B) கிழக்கு ஹிமாலயா
(C) கடலோர ஆந்திரா மற்றும் ஒரிசா
(D) ஜெய்சால்மர்-பார்மர் பகுதி

46. Which of the following areas or region is most prone to Earthquake?

(A) Ganga – Brahmaputra Valley

(B) Deccan plateau

(C) Plains of Northern India

(D) Western Ghats

இவற்றுள் அதிகமான நிலநடுக்கம் ஏற்படும் பகுதி

(A) கங்கா - பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு

(B) தக்காண பீடபூமி

(C) வட இந்திய சமவெளி

(D) மேற்கு தொடர்ச்சிமலை

47. What is not a file system?

(A) FAT32

(B) NEFT

(C) NTFS

(D) EXT2/3

கீழ்க்கண்டவற்றில், எது கோப்பை செய்மை கிடையாது?

(A) FAT32

(B) NEFT

(C) NTFS

(D) EXT2/3

48. Expansion of BCC is

(A) Basic Carbon copier

(B) Blind Carbon Copier

(C) Basic Carbon Copy

(D) Blind Carbon Copy

BCC என்பதன் விரிவாக்கம்

(A) அடிப்படை நகலகம்

(B) அறியா நகலகம்

(C) அடிப்படை நகல்

(D) அறியா நகல்

49. The spin quantum number of an Electron is

(A) 3/2
(B) 1/2
(C) 5/2
(D) 7/2

ஒரு எலக்ட்ரானின் தற்சுழற்சி குவாண்டம் எண்ணின் மதிப்பு

(A) 3/2
(B) 1/2
(C) 5/2
(D) 7/2

50. One light year is equal to

(A) $9.460 \times 10^{12}$ km
(B) $9.460 \times 10^{15}$ km
(C) $8.640 \times 10^{12}$ km
(D) $8.640 \times 10^{15}$ km

ஒரு ஒளி ஆண்டு என்பது

(A) $9.460 \times 10^{12}$ கி. மீ
(B) $9.460 \times 10^{15}$ கி. மீ
(C) $8.640 \times 10^{12}$ கி. மீ
(D) $8.640 \times 10^{15}$ கி. மீ

51. 'F'- number is related to

(A) jet – engines
(B) camera lens
(C) atmospheric pressure
(D) force of buoyancy

'F' - எண் என்பது எதோடு தொடர்புடையது?

(A) ஜெட் இயந்திரங்கள்
(B) காமரா வில்லை
(C) வளி மண்டல அழுத்தம்
(D) மிதவை விசை

52. If $p$ is the momentum of an object of mass $m$, then $p^2/m$ has the same dimensions as that of

(A) acceleration
(B) force
(C) power
(D) energy

$m$ நிறை கொண்ட ஒரு பொருளது உந்தம் $p$ எனில், $p^2/m$ என்பதன் பரிமாணங்கள் எதன் பரிமாணங்களுக்குச் சமம் ஆகும்?

(A) முடுக்கம்
(B) விசை
(C) திறன்
(D) ஆற்றல்

53. The unit of equivalent conductance is

(A) mho $cm^2$ $equiv^{-1}$

(B) mho $cm^{-2}$ $equiv^{-1}$

(C) mho $cm^{-2}$ equiv

(D) mho $cm^2$ equiv

சமான கடத்து திறனின் அலகு

(A) mho $cm^2$ $equiv^{-1}$

(B) mho $cm^{-2}$ $equiv^{-1}$

(C) mho $cm^{-2}$ equiv

(D) mho $cm^2$ equiv

54. Pick out the correct pairing of purines and pyrimidine responsible for the structure of DNA is
A – adenine, G – guanine, C – cytosine, T – thymine, U – uracil

(A) A – T, G – C

(B) A – C, G – T

(C) A – G, C – T

(D) A – U, G – C

DNA அமைப்புக்கு ஏதுவான இணையும் செட்களையும் இணையா செட்களையும் குறிப்பிடுக
A – அடினைன், G – குவானின், C – சைட்டோசின், T – தைமின், U – யுராசில்

(A) A – T, G – C

(B) A – C, G – T

(C) A – G, C – T

(D) A – U, G – C

55. The Kanha Natural park is situated at

(A) Madhaya Pradesh

(B) Rajasthan

(C) Bhutan

(D) Uttarkhand

கன்ஹா தேசியப் பூங்காவின் அமைவிடம்

(A) மத்தியப்பிரதேசம்

(B) ராஜஸ்தான்

(C) பூடான்

(D) உத்தரகாண்ட்

56. What is the amount of calories needed for a hardworking Indian Model Women (IRW), when she is working?

(A) 1610
(B) 1800
(C) 900
(D) 826

கடினமான தொழில் செய்யும் இந்திய மாதிரிப்பெண் (IRW), வேலை செய்யும் போது தேவைப்படும் கலோரியின் அளவு என்ன?

(A) 1610
(B) 1800
(C) 900
(D) 826

57. Oxytocin and vasopressin are madeup of

(A) 10 amino acids
(B) 29 amino acids
(C) 39 amino acids
(D) 9 amino acids

ஆக்ஸிடோஸின் மற்றும் வாசோப்ரசின் எதனால் ஆக்கப்பட்டுள்ளது?

(A) 10 அமினோ அமிலங்கள்
(B) 29 அமினோ அமிலங்கள்
(C) 39 அமினோ அமிலங்கள்
(D) 9 அமினோ அமிலங்கள்

58. The terminal end of a chromosome is called

(A) Metamere
(B) Telomere
(C) Centromere
(D) Basal granule

குரோமோசோமின் நுனி இவ்வாறு அழைக்கப்படும்

(A) மெட்டாமிர்
(B) டீலோமிர்
(C) சென்ட்ரோமிர்
(D) அடிப்படை துகள்கள்/பேசல் கிரானுல்

59. Where is the 19th Youth festival of India held?

(A) Bhopal
(B) Goa
(C) Guwahati
(D) Bengaluru

19 வது இந்திய இளைஞர்கள் திருவிழா எங்கு நடைபெற்றது?

(A) போபால்
(B) கோவா
(C) கவுஹாதி
(D) பெங்களுரு

60. The Supreme court said that the freedom of speech and expression is indispensable in a democracy. In which case this Verdict was given?

(A) Prabhu Dutt V. Union of India
(B) Romesh Thapar V. State of Madras
(C) Communist party of India (M) V Bharat Kumar
(D) Lucy V. State of Goa

உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பு – மக்களாட்சியில் பேச்சுரிமை மற்றும் உணர்வுரிமை தவிர்க்க முடியாதவை இந்த தீர்ப்பு எந்த வழக்கை குறிக்கும்?

(A) பிரபு தத் V இந்திய அரசாங்கம்
(B) ரோமேஷ்தாபர் V மதராஸ் மாநிலம்
(C) இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (M) V பரத்குமார்
(D) லுசி V கோவா மாநிலம்

61. The High Courts at Bombay, Calcutta and Madras were established under the

(A) Indian High Courts Act, 1861
(B) Indian High Courts Act, 1865
(C) Indian High Courts Act, 1911
(D) Government of India Act, 1919

பம்பாய், கல்கத்தா மற்றும் சென்னை உயர்நீதிமன்றங்கள் —————— கீழ் உருவாக்கப்பட்டன.

(A) இந்திய உயர்நீதி மன்றங்கள் சட்டம், 1861
(B) இந்திய உயர்நீதி மன்றங்கள் சட்டம், 1865
(C) இந்திய உயர்நீதி மன்றங்கள் சட்டம், 1911
(D) இந்திய அரசு சட்டம், 1919

62. The Goods and Service tax will be implemented in India from

(A) Jan 1, 2017
(B) April 1, 2017
(C) August 3, 2017
(D) Feb 1, 2017

இந்தியாவில் பொருள் மற்றும் சேவை வரி எந்த நாளிலிருந்து நடைமுறைபடுத்தப்பட உள்ளது?

(A) ஜனவரி 1, 2017
(B) ஏப்ரல் 1, 2017
(C) ஆகஸ்ட் 3, 2017
(D) பிப்ரவரி 1, 2017

63. The e-facility launched by CBDT for online redressal of Tax payer's grievances in September 2016 is

(A) e-Market
(B) e-NAM
(C) e-Visa
(D) e-Nivaran

செப்டம்பர் 2016 இல், CBDTயினால் தொடங்கப்பட்டுள்ள வரி செலுத்துவோர்களது குறைகளை தீர்ப்பதற்கான இணையதளமுக மின்னணு வசதி ———————— ஆகும்.

(A) ஈ–மார்க்கெட்
(B) ஈ–NAM
(C) ஈ–விசா
(D) ஈ–நிவாரன்

64. Which place in India, the Islamic development bank planned to open its first Branch?

(A) Ahmedabad
(B) Chennai
(C) Delhi
(D) Mumbai

இஸ்லாமிய வளர்ச்சி வங்கியின் முதல் கிளை இந்தியாவில் எங்கு தொடங்கப்பட உள்ளது?

(A) அகமதாபாத்
(B) சென்னை
(C) டில்லி
(D) மும்பை

65. The Chairman of 14th Finance commission is

(A) C. Rangarajan
(B) Vijay Kelkar
(C) Y.V. Reddy
(D) Subba Rao

14–வது நிதிக்குழுவின் தலைவர்

(A) C. ரங்கராஜன்
(B) விஜய் கெல்கர்
(C) Y.V. ரெட்டி
(D) சுப்பா ராவ்

66. Christianity spread throughout world during the empire of

(A) Egyptian empire

(B) French empire

(C) German empire

(D) Roman empire

இவர்களில் கிறித்துவத்தை உலகில் பரப்பிய பேரரசாக கருதப்படுபவர்கள்

(A) எகிப்திய பேரரசு

(B) பிரெஞ்சு பேரரசு

(C) ஜெர்மானிய பேரரசு

(D) ரோமானிய பேரரசு

67. Which of the following factors that are responsible for present crisis in the jute industry in India?

I. The decline in overseas market

II. Inadequate supply of raw jute

III. Stiff competition from synthetic packing materials

Choose the correct answer.

(A) I and II

(B) I, II and III

(C) I and III

(D) II and III

கீழ்கண்ட எந்த ஒரு காரணி இன்றைய இந்தியாவில் சணல் தொழிற்சாலையின் நலிவிற்கு காரணமாக கருதப்படுகிறது

I. வெளிநாட்டு வியாபாரத்தில் சரிவு

II. மூலப்பொருள் பற்றாக்குறை

III. செயற்கை இட நிரப்புப் பொருள்களின் கடினப்போட்டி

இவற்றுள் சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்.

(A) I மற்றும் II

(B) I, II மற்றும் III

(C) I மற்றும் III

(D) II மற்றும் III

68. The agency estimating the national income of India is

(A) Reserve Bank of India

(B) Planning Commission

(C) Ministry of Finance

(D) Central Statistical Organization

இந்தியாவில் தேசிய வருவாயை கணக்கிடும் நிறுவனம்

(A) ரிசர்வ் வங்கி

(B) திட்ட குழு

(C) நிதித் துறை

(D) மத்திய புள்ளியியல் துறை

69. Whom did Ahmad Sha Abdali appoint as Chief Administrator and regent in Delhi?

(A) Ahmad Khan Bangash

(B) Munir-Ud-Daulah

(C) Najib-Ud-Daulah

(D) Gamar-Ud-Din Khan

அகமது ஷா அப்தாலி டெல்லியின் முதன்மை ஆட்சியாளர் மற்றும் தனது பிரதிநிதியாக யாரை நியமித்தார்

(A) அகமது கான் பங்காஷ்

(B) முனீர் – உத் – தௌலா

(C) நஜிப் – உத் – தௌலா

(D) கமர் – உத் – தின் கான்

70. Shivaji, the maratha ruler crowned himself at

(A) Shivaner

(B) Purandhar

(C) Torna

(D) Rajgarh

சிவாஜி மன்னராக முடி சூட்டிக்கொண்ட இடம்

(A) சிவநர்

(B) புரந்தர்

(C) டோர்னா

(D) ராஜ்கார்

71. Examine the following two statements and select the correct answer to these by using the codes given below :

Assertion (A) : There has been a growing demand for review of centre–state relationship.

Reason (R) : The states do not have adequate resources to take developmental projects.

(A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)

(B) Both (A) and (R) are true but (R) is not a correct explanation of (A)

(C) (A) is true, but (R) is false

(D) (A) is false, but (R) is true

கீழ்காணும் இரண்டு வாக்கியங்களில் சரியான விடையை மதிப்பீடு செய்க. மேலும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள தொகுப்புகளில் இருந்து சரியான விடையை தேர்ந்தெடுக்க.

கூற்று (A) : மத்திய – மாநில உறவுகளை மறுசீராய்வு செய்வதற்கான கோரிக்கைகள் வலுப்பெறுகின்றன.

காரணம் (R) : மாநிலங்களில் மேம்பாட்டு திட்டங்களை ஏற்படுத்துவதற்கான போதிய வாய்ப்பு வளங்கள் இல்லாமை.

(A) (A) மற்றும் (R) சரியே, (R) என்பது (A) வின் சரியான விளக்கம் ஆகும்

(B) (A) மற்றும் (R) சரி, ஆனால் (R) என்பது (A) வின் சரியான விளக்கம் அல்ல

(C) (A) என்பது சரி ஆனால் (R) என்பது தவறு

(D) (A) என்பது தவறு, ஆனால் (R) என்பது சரியே

72. In which year, the Mahathma Gandhi Peace Prize was instituted?

(A) 1993
(B) 1995
(C) 1997
(D) 1965

எந்த ஆண்டு மகாத்மா காந்தியின் அமைதிக்கான விருது தோற்றுவிக்கப்பட்டது?

(A) 1993
(B) 1995
(C) 1997
(D) 1965

73. Who among the following is the pioneer of the theory of neo-realism?

(A) Kenneth Waltz
(B) Hans Morgenthau
(C) Barry Buzan
(D) Raul Prebish

கீழ்வருபவர்களில் புதிய உண்மைவாத கருத்துக் கோட்பாட்டின் முன்னோடியாக திகழ்பவர் யார்?

(A) கென்னத் வால்ஸ்
(B) ஹான்ஸ் மார்கன்தோ
(C) ஃபேரி பூசான்
(D) ரௌல் பிரிபெஸ்

74. Which of the following bills were decided by the joint sitting of the two houses of Parliament?

(A) The Hindu Code Bill, The Prevention of Terrorism Bill, The Women Reservation Bill

(B) The Dowry Prohibition Bill, The Panchayatiraj Bill, The Anti–Defection Bill

(C) The Dowry Prohibition Bill, The Banking service commission (Repeal Bill), The Prevention of Terrorism Bill.

(D) The Banking service commission (Repeal Bill) The Prevention of Terrorism Bill, The Hindu Code Bill.

பின்வருவனவற்றுள் எந்த மசோதாக்கள் பாராளுமன்ற கூட்டுக் கூட்டத்தால் நிறைவேற்றப்பட்டவை?

(A) இந்து சட்ட தொகுப்பு மசோதா, பயங்கரவாத தடுப்பு மசோதா, பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா

(B) வரதட்சனை தடை மசோதா, பஞ்சாயத்து இராஜ் மசோதா, கட்சித்தாவல் தடை மசோதா

(C) வரதட்சனை தடை சட்டம், வங்கிப் பணிகள் ஆணையம் (இரத்து) மசோதா, பயங்கரவாத தடுப்பு மசோதா

(D) வங்கிப் பணிகள் ஆணைய (இரத்து) மசோதா, பயங்கரவாத தடுப்பு மசோதா, இந்து சட்ட தொகுப்பு மசோதா

75. Punjab is the home of —————— folk dance.

(A) Damali

(B) Tamasha

(C) Lezim

(D) Bhangra

பஞ்சாப் எந்த நாட்டுபுற கலையின் உறைவிடம்?

(A) தமாலி

(B) தமாஷா

(C) லெஸிம்

(D) பங்காரா

76. The Twelfth plan period is

(A) 2007–2012 (B) 2009–2014

(C) 2012–2017 (D) 2014–2019

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்ட காலம்

(A) 2007–2012 (B) 2009–2014

(C) 2012–2017 (D) 2014–2019

77. The Nehru-Mahalanobis model was introduced in the

(A) First plan (B) Second plan

(C) Third plan (D) Fourth plan

நேரு-மகலனோபிஷ் திட்ட மாதிரியை எந்த திட்டத்தில் புகுத்தினர்?

(A) முதல் திட்டம் (B) இரண்டாம் திட்டம்

(C) மூன்றாம் திட்டம் (D) நான்காம் திட்டம்

78. The main driver of inflation in India in the last few years has been

(A) Increased rural wages

(B) Escalated food prices

(C) Increased cost of intermediate products

(D) Increased fuel cost

இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளில் பணவீக்கம் ஏற்பட தூண்டும் முக்கிய காரணி

(A) கிராமங்களில் கூலி அதிகரிப்பு

(B) உணவு தானியங்களின் விலை உயர்வு

(C) இடைப்பட்ட பொருட்களின் விலை அதிகரிப்பு

(D) எரிபொருள்களின் விலை உயர்வு

79. Bench Terracing is famous in

(A) Tanjore & Namakkal
(B) Ooti & Nilgiri
(C) Salem & Dharmapuri
(D) Madurai & Dindukal

படியடுக்கு வேளாண்மை எங்கு பிரசித்தி பெற்றது

(A) தஞ்சாவூர் & நாமக்கல்
(B) ஊட்டி & நீலகிரி
(C) சேலம் & தர்மபுரி
(D) மதுரை & திண்டுக்கல்

80. "Intangible goods"

(A) Machinery, instruments, industries
(B) Waste goods
(C) Oil seeds
(D) Health, Research, Quality Education

அருவப் பொருள்கள்

(A) இயந்திரங்கள், கருவிகள், தொழிற்சாலைகள்
(B) உபயோகமில்லாத பொருட்கள்
(C) எண்ணெய் வித்துக்கள்
(D) உடல் நலம், ஆராய்ச்சி, தரமான கல்வி

81. Who started the Self Respect Movement?

(A) V.O. Chidambaram Pillai
(B) E.V. Ramaswamy Naicker
(C) K. Veeramani
(D) Ayothi Pandidadas

சுயமரியாதை இயக்கத்தை துவக்கியவர் யார்?

(A) வ.உ. சிதம்பரம் பிள்ளை
(B) ஈ.வி. ராமசாமி நாயக்கர்
(C) க. வீரமணி
(D) அயோதி பண்டிததாஸ்

82. Which of the following period is concerned with the rise of extremism?

(A) 1885 – 1905 (B) 1905 – 1920

(C) 1920 – 1931 (D) 1931 – 1947

பின்வருவனவற்றுள் எந்த காலக் கட்டம் தீவிரவாதத்தின் எழுச்சியோடு தொடர்புடையது?

(A) 1885 – 1905 (B) 1905 – 1920

(C) 1920 – 1931 (D) 1931 – 1947

83. Which one of the following Movement began with the Dandi March?

(A) Khilafat Movement

(B) Non-Cooperation Movement

(C) Civil Disobedience Movement

(D) Self-Respect Movement

பின்வருவனவற்றுள் எந்த இயக்கம் தண்டி யாத்திரையுடன் தொடங்கியது?

(A) கிலாபத் இயக்கம்

(B) ஒத்துழையாமை இயக்கம்

(C) சட்ட மறுப்பு இயக்கம்

(D) சுயமரியாதை இயக்கம்

84. In 1940, during the individual Satyagraha the President of Tamil Nadu Congress Party was

(A) Sathyamurthy

(B) Rajaji

(C) Kamaraj

(D) Kumarasamy Raja

1940-ல் தனிநபர் சத்தியாகிரகப் போராட்டத்தின் போது தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவர்

(A) சத்தியமூர்த்தி

(B) ராஜாஜி

(C) காமராசர்

(D) குமாரசாமி ராஜா

85. The sum of the two numbers is $116\frac{2}{3}$% of the second number, then the ratio of the first number to the second number is

(A) 1 : 6
(B) 3 : 7
(C) 7 : 3
(D) 7 : 4

இரு எண்களின் கூடுதலானது இரண்டாவது எண்ணில் $116\frac{2}{3}$ சதவீதம் எனில் முதல் எண்ணிற்கும் இரண்டாவது எண்ணிற்குமான விகிதம்

(A) 1 : 6
(B) 3 : 7
(C) 7 : 3
(D) 7 : 4

86. In a clock, the angle traced by the hour hand in 12 hours is

(A) 360°
(B) 180°
(C) 90°
(D) 30°

ஒரு கடிகாரத்தில், மணி காட்டும் முள்ளின் கோணம், 12 மணிக்கு என்னவாக இருக்கும்?

(A) 360°
(B) 180°
(C) 90°
(D) 30°

87. The value of $999\frac{995}{999} \times 999$ is

(A) 998996
(B) 99999
(C) 999
(D) 5997

$999\frac{995}{999} \times 999$ -ன் மதிப்பு

(A) 998996
(B) 99999
(C) 999
(D) 5997

88. A, B and C can complete a piece of work in 24, 6 and 12 days respectively working together, they will complete the same work in

(A) $3\frac{3}{7}$ days (B) $4\frac{2}{7}$ days

(C) $10\frac{3}{7}$ days (D) $12\frac{1}{4}$ days

A, B மற்றும் C இவர்கள் ஒரு குறிப்பிட்ட வேலையை செய்து முடிக்க எடுக்கும் கால அளவுகள் முறையே 24, 6, மற்றும் 12 நாட்கள் எனில் இவர்கள் மூவரும் சேர்ந்து ஒரு குறிப்பிட்ட வேலையை செய்து முடிக்க எடுத்துக் கொள்ளும் கால அளவு

(A) $3\frac{3}{7}$ நாட்கள் (B) $4\frac{2}{7}$ நாட்கள்

(C) $10\frac{3}{7}$ நாட்கள் (D) $12\frac{1}{4}$ நாட்கள்

89. If $\frac{1}{3}+\frac{1}{2}+\frac{1}{x}=4$ then $x=?$

(A) $\frac{6}{19}$ (B) $\frac{8}{19}$ (C) $\frac{12}{17}$ (D) $\frac{9}{10}$

$\frac{1}{3}+\frac{1}{2}+\frac{1}{x}=4$ எனில் $x=?$

(A) $\frac{6}{19}$ (B) $\frac{8}{19}$ (C) $\frac{12}{17}$ (D) $\frac{9}{10}$

90. The average of first nine prime number is

(A) $11\frac{1}{9}$ (B) 22

(C) 25 (D) $12\frac{2}{4}$

முதல் 9 பகா எண்களின் சராசரி

(A) $11\frac{1}{9}$ (B) 22

(C) 25 (D) $12\frac{2}{4}$

91. A and B are brothers, C and D are brothers. A's son is D's brother, how is B related to C?

(A) Father

(B) Brother

(C) Grand father

(D) Uncle

Aயும் Bயும் சகோதரர்கள், Cயும் Dயும் சகோதரர்கள். A-யுடைய மகன் D -யின் சகோதரன், எனில் C-க்கு B என்ன உறவு?

(A) அப்பா

(B) சகோதரன்

(C) தாத்தா

(D) மாமா

92. The next term of the series 7, 3, 10, 13, 23, ———— is

(A) 33 (B) 36

(C) 39 (D) 43

7, 3, 10, 13, 23 ———— என்ற வரிசையில் அடுத்த எண்.

(A) 33 (B) 36

(C) 39 (D) 43

93. Find the odd man out: 3, 5, 7, 12, 17, 19

(A) 3 (B) 12

(C) 5 (D) 19

பின்வரும் வரிசையில் பொருந்தாத எண்ணை தேர்வு செய்க: 3, 5, 7, 12, 17, 19

(A) 3 (B) 12

(C) 5 (D) 19

94. A sum of money at simple interest amounts to Rs. 815 in 3 years and to Rs. 854 in 4 years. The sum in

(A) 698 (B) 769

(C) 816 (D) 595

ஒரு தொகைக்கு தனிவட்டி மூலம் 3 ஆண்டுகளில் கிடைக்கும் மொத்தத்தொகை ரூ.815 மற்றும் 4 ஆண்டுகளில் கிடைக்கும் மொத்தத்தொகை ரூ.854 எனில் மூலத்தொகை யாது?

(A) 698 (B) 769

(C) 816 (D) 595

95. What will be the compound interest on a sum of Rs. 25,000 after 3 years at the rate 12 p.c. per annum?

(A) Rs. 20,000

(B) Rs.12,800.20

(C) Rs. 10,123.20

(D) Rs. 10,000

ரூ. 25,000-க்கு 3 வருடங்களுக்குப் பின் 12% வட்டி வீதம் கிடைக்கும் கூட்டு வட்டி ஆண்டுக்கு

(A) Rs. 20,000

(B) Rs.12,800.20

(C) Rs. 10,123.20

(D) Rs. 10,000

96. The simple interest on ₹ 7,500 at 6% per annum for 8 year is

(A) ₹ 4,200 (B) ₹ 3,600

(C) ₹ 2,800 (D) ₹ 3,400

ஆண்டு ஒன்றுக்கு 6% தனிவட்டி வீதம் 8 ஆண்டுகளில் ரூ.7,500-க்கான தனிவட்டி என்ன?

(A) ₹ 4,200 (B) ₹ 3,600

(C) ₹ 2,800 (D) ₹ 3,400

97. The difference between memory and storage is that memory is —————— and storage is ——————.

(A) temporary, permanent

(B) permanent, temporary

(C) slow, fast

(D) static, dynamic

நினைவகம் மற்றும் சேமிப்பகத்தின் வேறுபாடானது, நினைவகம் என்பது —————— மற்றும் சேமிப்பகம் என்பது ——————.

(A) தற்காலிகமானது, நிலையானது

(B) நிலையானது, தற்காலிகமானது

(C) மெதுவானது, விரைவானது

(D) மாறாநிலை, இயங்குநிலை

98. SWIFT is ——————.

(A) Society for Worldwide Interbank Financial Telecommunication

(B) Standard Worldwide Internet Financial Transaction

(C) Society for Worldwide Internet Financial Transaction

(D) Standard for Worldwide Interbank Financial Telecommunication

SWIFT என்பது —————— ஆகும்.

(A) உலக அளவிலான வங்கிகள் இடையே நடக்கும் நிதி, தொலைத் தொடர்பு அமைப்பு

(B) உலக அளவிலான இணைய நிதி பரிவர்த்தனை தரம்

(C) உலக அளவிலான இணைய நிதி பரிவர்த்தனை அமைப்பு

(D) உலக அளவிலான வங்கிகள் இடையேயான நிதி, தொலை தொடர்பு தரம்.

99. ———— Year Supreme Court first time banned the mining activities in Aravalli Hills.

(A) 2002

(B) 2003

(C) 2004

(D) 2005

———— ஆண்டு முதன் முதலில் உச்சநீதிமன்றம் ஆரவல்லி மலைப்பகுதியில் தாதுக்கள் எடுப்பதை தடை செய்தது.

(A) 2002

(B) 2003

(C) 2004

(D) 2005

100. Assertion (A) : The frequency of flood in North Indian plains had increased during the last couple of decades.

Reasons (R) : There has been a reduction in the depth of river valleys due to deposition of silt.

(A) Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)

(B) Both (A) and (R) are true but (R) is not a correct explanation of (A)

(C) (A) is true, (R) is false

(D) (A) is false, (R) is true

கூற்று (A) : கடந்த இருபது வருடங்களில் வட இந்திய சமவெளியில் வெள்ளத்தின் வீச்சு அதிகரித்துள்ளது.

காரணம் (R): வண்டல் மண் படிவினால் பள்ளத்தாக்கின் ஆழம் குறைந்துள்ளது.

(A) (A) மற்றும் (R) சரியானவை, (R) (A) -விற்கான சரியான விளக்கம்

(B) (A) மற்றும் (R) சரியானவை, (R) (A) - விற்கான சரியான விளக்கம் அல்ல

(C) (A) சரியானது, ஆனால் (R) தவறு

(D) (A) தவறு, ஆனால் (R) சரியானது

**JSOGS16**

Register Number | | | | | | | | | |

# 2016

# Paper II

# GENERAL STUDIES

# (Degree Standard)

**Time Allowed : 2 Hours]** **[Maximum Marks : 200**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. This Booklet has a cover (this page) which should not be opened till the invigilator gives signal to open it at the commencement of the examination. As soon as the signal is received you should tear the right side of the booklet cover carefully to open the booklet. Then proceed to answer the questions.
2. This Question Booklet contains **100** questions. Prior to attempting to answer the candidates are requested to check whether all the questions are there and ensure there are no blank pages in the question booklet. In case any defect in the Question Paper is noticed it shall be reported to the Invigilator within first 10 minutes.
3. Answer all questions. All questions carry equal marks.
4. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
5. An Answer Sheet will be supplied to you separately by the Invigilator to mark the answers.
6. You will also encode your Register Number, Subject Code, Question Booklet Sl. No. etc. with Blue or Black ink Ball point pen in the space provided on the side 2 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information, action will be taken as per commission's notification.
7. Each question comprises *four* responses (A), (B), (C) and (D). You are to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the Answer Sheet.
8. In the Answer Sheet there are **four** circles Ⓐ, Ⓑ, Ⓒ and Ⓓ against each question. To answer the questions you are to mark with Ball point pen ONLY ONE circle of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. *e.g.* If for any item, Ⓑ is the correct answer, you have to mark as follows :

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
11. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide at their discretion.
12. In all matters and in cases of doubt, the English Version is final.
13. Do not tick-mark or mark the answers in the Question booklet.

SEAL

ல